HE

## LMV - Advance Module

# பாதுகாப்பாக வாகனம் ஓட்டுதல்

சாலையில் வாகனம் ஓட்டுதலுக்கான அடிப்படை செயல்முறை மற்றும் விதிமுறைகள்



# பாதுகாப்பாக வாகனம் ஓட்டுதல்

*சாலையில் வாகனம் ஓட்டுதலுக்கான அடிப்படை செயல்முறை மற்றும் விதிமுறைகள்*

# அச்சிடலுக்கான விபரங்கள்

இந்தியாவின் வேகமான வளர்ச்சியின் காரணமாக பலதரப்பட்ட பிரச்சனைகள் ஏற்படுகின்றன. நமது சாலைகளில் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதன் காரணமாகவும் மற்றும் மொபைல் போனில் பேசியபடி வாகனத்தை ஓட்டுதல், வண்டி ஓட்டும் போது மது அருந்துதல் மற்றும் புகை பிடித்தல், போன்ற அனைத்தும் மானுட வாழ்க்கைக்கும் மற்றும் சொத்துகளுக்கும் பெரிய அளவிலான பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன.

பொறுப்புற்ற வாகன ஓட்டுதலின் காரணமாக ஏற்படுத்தும் விபத்துகள் மற்றும் காயங்கள் குறித்த செய்திகள் நிரம்பி வழிகின்றன. நாம் எச்சரிக்கையாக இருந்தால் மட்டுமே இப்புள்ளி விபரங்களின் ஒரு பகுதியாக நாம் மாறாமல் வாழ முடியும்.

சக சாலை பயன்பாட்டாளர்கள் குறித்த அக்கறை மிக்க வாகன ஓட்டுதலுக்கான, கல்வியறிவு மற்றும் விழிப்புணர்வு மிக்க புதிய கலாச்சாரம் ஒன்றினை உருவாக்குவதும் மற்றும் சாலையை பொறுப்புடன் பயன்படுத்துவதும் மட்டுமே சாலைகளில் தினசரி ஏற்படும் விபத்துகள் மற்றும் இறப்புகளை குறைப்பதற்கான வழியாகும். நம்மால் சாலைகளின் தன்மையை மாற்ற முடியும் என்னும் பொறுப்பினையும் மற்றும் அக்கறையையும் நாம் ஒவ்வொருவரும் மேற்கொள்ள வேண்டும்.

Language: Tamil

வெளியிடுவோர்: ஹ்யூபர்ட் எப்னர் (இந்தியா பிரைவேட் லிமிடெட்).
C - 18, சிராக் என்க்லேவ்
புது டெல்லி - 110 048 (இந்தியா)
தொபே.: +91 11 46107654
மின்னஞ்சல்: driving@he-india.com
இணையதளம்: www.he-india.com
© அனைத்து உரிமைகளும் பதிவுசெய்யப்பட்டுள்ளது

முதல் பதிப்பு: செப்டம்பர் 2009

இந்த வெளியீட்டின் எந்தவொரு பகுதியும் மறு உருவாக்கம், சேமிப்பு அல்லது மின், மெக்கானிக்கல், நகல், பதிவு போன்றவைகளின் வழியாக நகல் எடுத்தல் போன்றவைகள் பதிப்பகத்தின் முன்அனுமதியின்றி மேற்கொள்ளப்படக் கூடாது. பொது வாடகைக்கு விடுவதற்கும் அனுமதியில்லை

# பொருளடக்க அட்டவணை




■ LMV - அடிப்படை — 1-24

பொறுப்புவாய்ந்த ஓட்டுனர் — 1-10
- ஓட்டுனன் பொறுப்புகள் — 1
- தேவைப்படும் ஆவணங்கள் — 1
- ஓட்டுனர் உமம் — 2
- மோட்டார் வாகனப் பதிவு — 2
- சுமை மற்றும் பயணிகளேற்றல் — 4
- வாகனம் மற்றும் பயணிகளின் பாதுகாப்பு — 5
- சமூகப் பொறுப்புணர்வு — 6
- ஒரு நல்ல ஓட்டுனன் பண்புகள் — 6
- ஆரோக்கியம் மற்றும் உடல்தகுதி — 7
- அறிந்துகொள்ளல் பயிற்சி திறமை மற்றும் அனுபவம் — 9
- போக்குவரத்து விதிமீறல்கள் மற்றும் அபராதம் — 10

வாகன அறிவு மற்றும் பராமப்பிற்கான தேவை — 11-14
- வாகனத்தைப் பராமத்தல் — 11

வாகனங்கள் பழுது/விபத்து/இழுத்துச்செல்லுதல் — 15-18
- பழுது — 15
- விபத்து — 16
- இழுத்துச் செல்லுதல் — 17

முதலுதவி — 19-24
- சாலை விபத்தில் சிக்கியவர்களுக்கான முதலுதவி — 19
- தலைக் காயம் — 19
- கழுத்து மற்றும் தண்டுவடக் காயம் — 20
- மார்பு பாதிப்பு அறிகுறிகள் — 21
- எலும்புமுறிவுக்கான அறிகுறிகள் — 21
- வெளிப்புற காயங்கள். வெட்டுக் காயங்கள் மற்றும் சிராய்ப்புகள் — 22
- தீப்பிடித்தல் — 23





■ LMV - 1 — 25-48

வாகன இயக்கவியல் — 27-30
- ஈர்ப்பு விசை — 27
- இயக்க ஆற்றல் — 27
- வாகனத்தின் வேகம் — 28
- வாகனத்தின் அமைப்பு — 28
- சாலையின் புறப்பரப்பில் டயர்களின் பிடிமானம் — 28
- சாலை நிலை — 29
- சாலைப் பொறியியல் — 29
- பாரம் — 30
- பிரேக்கிங் சிஸ்டம், — 30

கடினமான சூழ்நிலைகளில் வாகனத்தை ஓட்டுதல் — 31-38
- சாலை நிலைமைகள் — 31
- மோசமான வானிலை நிலவும் சூழ்நிலைகள் — 33

# பொருளடக்க அட்டவணை


இடர் கணிப்பு 39-44

இடர் கணிப்பு *39*

வாகனத்தின் வேகக் குறைப்பு மற்றும் பிரேக்கிங் மேலாண்மை *42*

காணும் திறன் *43*

நெருக்கடியான சூழ்நிலைகள் 45-48

டயர் வெடித்தல் *45*

பிரேக் செயல் இழப்பு *46*

பானட் பறந்து போகுதல் *46*

செயலைத் தவிர்த்தல் *46*

வாகனத்தில் தீ பிடித்தல் *46*

சறுக்கி விழுதல் *47*

வாகனங்கள் நெருக்கமாக பின் தொடர்தல் *48*





■ LMV - 2 49-68

வாகன தொழில்நுட்பம் மற்றும் பராமப்பு 51-68

முன்னுரை *51*

மோட்டார் வாகனத்தின் பாகங்கள் *51*

மோட்டார் வாகனத்தின் பல்வேறு அமைப்புகள் *51*

இயக்க கட்டுப்பாடுகள் (ட்ரைவிங் கன்ட்ரோல்கள்) *55*

மோட்டார் வாகனத்தை சோதித்தல் *60*

முன்னெச்சக்கை பராமப்பு *63*

வாகன பராமப்பு *64*

இயந்திரக் கோளாறுகளைக் களைதல் *66*





■ LMV - 3 69-80

தனியார் கார் ஒட்டுனர்களுக்கான மென் திறமைகள் 71-80

தனியார் கார் ஒட்டுனன் பங்கு *71*

சட்ட அம்சங்கள் *71*

வாடிக்கையாளர் உறவு *72*

பராமப்பு மற்றும் வாகனத்தில் சுத்தத்தை பராமத்தல் *74*

போக்குவரத்து கட்டாயங்கள் *75*

தனிப்பட்ட தோற்றம் *75*

சிறப்பான பயணிகளை (மிகவும் முக்கியமான நபர்கள். குழந்தைகள். முதியோர்கள். உடல் ஊனமுற்றோர்கள்) கையாளுதல் *77*

பிரச்னைக்குய அம்சங்கள் *78*

விபத்துகள் / பழுதுகள் *79*

# பொறுப்புவாய்ந்த ஓட்டுனர்



வாகனம் ஓட்டும் திறனிற்கு சிறப்பான பயிற்சியும் மற்றும் கூடுதல் பொறுப்பும் தேவை. அவைகள் நிர்வாக மற்றும் சமூக பொறுப்புகள் மற்றும் வாகனம் மற்றும் அதிலுள்ள பொருட்களின் பாதுகாப்பு பொறுப்புமாகும். ஒரு வாகனத்தை ஓட்டுவதற்கு உங்களிடம் ஒரு செல்லத்தக்க ஓட்டுனர் உரிமமும் மற்றும் பதிவு மற்றும் காப்பீடு செய்யப்பட்டு முழு திறனுடன் கூடிய வாகனமும் தேவை

ஒரு சிறந்த ஓட்டுனர் பிற அனைத்து சாலை உபயோகிப்பாளர்களையும் கவனத்தில் கொண்டு, அவர்களிடம் நல்லிணக்கத்துடனும், மரியாதையுடனும் நடந்துகொள்ளவேண்டும். சாலையில் பாதுகாப்பாக ஓட்டுவதற்கு, சிறந்த ஆரோக்கியமும், நேர்மறையான அணுகுமுறை மற்றும் நடத்தையும் தேவை. அதற்கான உடல்தகுதியுடன் இருப்பது ஓட்டுனரின் பொறுப்பு ஆகும். பாதுகாப்பாக ஓட்டுவதற்கு தேவையான திறன் மற்றும் தகுதியை குறைக்கும் விஷயங்கள் குறித்து அவர்கள் அறிந்து வைத்திருக்கவேண்டும்.

## » ஓட்டுனரின் பொறுப்புகள்

ஒரு ஓட்டுனர் பின்வருவபற்றிற்கு பொறுப்பாவார்

- அவர் ஓட்டும் வாகன வகை மற்றும் அளவுக்கேற்ற ஓட்டுனர் உரிமத்தை பெற்றிருக்கவேண்டும்.
- தேவையான ஆவணங்கள், ஒரு முதலுதவி பெட்டி மற்றும் ஒரு எச்சரிக்கை முக்கோணம் ஆகியவைகளை கட்டாயம் வைத்திருக்க வேண்டும்.
- வாகனத்தின் தகுதி—ஒரு வாகனத்தை சாலையில் நன்கு ஓடக்கூடிய நிலையில் வைத்திருக்கவேண்டியது அவருடைய கடமையாகும்.
- பொருட்களையும், பயணிகளையும் பாதுகாப்பாக அழைத்துச் செல்வது ஓட்டுனரின் கடமையாகும். எடுத்துச் செல்லப்படும் பொருட்கள் முறையான பாதுகாப்பில் இருப்பதையும், அளவுக்கு மீறி பொருட்கள் ஏற்றப்படாமலிருப்பதையும் உறுதி செய்யவேண்டியது ஓட்டுனரின் பொறுப்பாகும். அனைத்து சந்தர்ப்பங்கள் மற்றும்
- அனைத்து சூழ்நிலைகளிலும் வாகனத்தை இயக்குவதற்கும், கையாள்வதற்கும் ஏற்ப உடல் தகுதியுடன் இருப்பதுடன், எப்போதும் எச்சரிக்கையாகவும் இருக்கவேண்டும். (களைப்பாக இருக்கக்கூடாது. சோர்வாக இருக்கக்கூடாது. குடித்து விட்டு வாகனம் ஓட்டக்கூடாது. ஓட்டும்போது கவனம் சிதறக்கூடாது.). அனைத்து சந்தர்ப்பங்களிலும் போக்குவரத்து விதிகளை மதித்து, பின்பற்றவும்.
- ஓட்டுனர் முறையான மற்றும் வசதியான உட்காரும் வசதியைப் பெற்றிருக்கவேண்டும். இது, அவர் வாகனக் கட்டுப்பாடுகள் மற்றும் பெடல்களை வசதியாக, எளிதில் அடையும் விதத்திலும், ஸ்டியரிங் சக்கரத்தை மென்மையாக, தடையின்றி கையாள்வதற்கு தகுந்ததாகவும் இருக்கவேண்டும்.
- அனைத்து சந்தர்ப்பங்களிலும் சீட் பெல்ட்டை பயன்படுத்தவேண்டும்.
- சுற்றுச்சூழல் மாசுபடாத வகையில் வாகனத்தை ஓட்ட வேண்டும். திடீரென்று வேகத்தை அதிகரிப்பதோ, சட்டென்று பிரேக் போடவோ கூடாது. நிறுத்துமிடங்களில் எஞ்சினை நிறுத்தாமல், வாகனத்தை நிறுத்தி, மாசு ஏற்படுவதை தவிர்க்கவும். வாகனத்தை மென்மையாக ஓட்டவும்.

## » தேவைப்படும் ஆவணங்கள்

ஒரு தொழில்முறை ஓட்டுனர், அவர் ஓட்டும் வாகனம் தொடர்பான அனைத்து ஆவணங்கள் குறித்தும் அறிந்து வைத்திருக்கவேண்டியது அவசியமாகும். மேலும் அவர் பயிற்சி பெற்ற ஓட்டுனர் என்பதற்கான சான்றிதழ்களையும் வைத்திருக்கவேண்டும். ஓட்டுனர் உரிமம், சாலைவரி மற்றும் பர்மிட்கள் போன்றவற்றை புதுப்பித்து அனைத்து ஆவணங்களையும் அப்டேட் செய்து வைத்திருப்பது ஓட்டுனரின் பொறுப்பு ஆகும்.

போக்குவரத்து விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் குறித்து முழுமையாக அறிந்து வைத்திருக்கவேண்டும்.

வாகனம் ஓட்டும்போது ஒரு ஓட்டுனர் சட்டப்படி கீழ்கண்ட ஆவணங்களை எடுத்துச்செல்லவேண்டும்:

- ஒரு செல்லத்தக்க ஓட்டுனர் உரிமம்
- வாகன பதிவு சான்றிதழ்
- உரிய சாலை வரி சான்றிதழ்
- பயணிகள் வரி/பொருட்கள்/வரி செலுத்திய சான்றிதழ்
- சரக்கு வவுச்சர்
- இன்சூரன்ஸ் சான்றிதழ்
- மாசு கட்டுப்பாடு சான்றிதழ்
- அதிகாரமளிப்பு/பர்மிட் மற்றும் வாகன தகுதி சான்றிதழ்
- தேவைப்பட்டால் ட்ரம்ப் அட்டை மற்றும் செல்லும் பாதை குறித்த வரைபடம் (இது வர்த்தக வாகனங்களுக்கு மட்டும் சட்டப்படி கட்டாயமானதாகும்.)



# பொறுப்புவாய்ந்த ஓட்டுனர்

எந்த ஒரு சீருடை அணிந்துள்ள காவல் துறை அதிகாரியும், போக்குவரத்து துறையைச் சேர்ந்த செயலாக்க பணியாளர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவன அலுவலர்களும், எந்த ஒரு சமயத்திலும் இந்த ஆவணங்களைப் பரிசோதிக்கலாம்.

ஒரு உண்மை நகல் என்பது ஒரு அங்கீகரிக்கப்பட்ட அரசாங்க அலுவலரின் சான்றினை பெற்றிருக்க வேண்டும்.

செல்லத்தக்க ஆவணங்களை காண்பிக்கத் தவறினால், அது ஒரு தண்டனைக்குரிய குற்றம் ஆகும். இதற்காக வாகனம் பறிமுதல் செய்யப்படலாம்.

## » ஓட்டுனர் உரிமம்

ஒரு செல்லத்தக்க ஓட்டுனர் உரிமமானது, அந்த ஓட்டுனர் கீழ்கண்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வாகனங்களை ஓட்டுவதற்கு உரிமம் பெற்றுள்ளார் என்பதை விளக்கவேண்டும்:

- கியர் இல்லாத மோட்டார் சைக்கிள்
- கியருடன் கூடிய மோட்டார் சைக்கிள்
- மூன்று சக்கர வாகனம்
- சிறு மோட்டார் வாகனம் (தனிநபர்/வர்த்தகம்)
- போக்குவரத்து வாகனம் (பொருட்கள்/பயணிகள்/
- குறிப்பிட்ட பணிகளுக்கான மோட்டார் வாகனம்)

### ஓட்டுனர் உரிமத்தின் செல்லத்தக்க காலம்

கொடுக்கப்பட்ட தேதிக்கு பிறகு 20 ஆண்டுகளுக்கோ அல்லது உங்கள் வயது 50 - ஆக ஆகும் வரையிலோ ஓட்டுனர் உரிமம் செல்லுபடியாகும். 50 ஆண்டுகளுக்கு மேல் ஓட்டுனர் உரிமத்தின் செல்லத்தக்க காலம் 5 ஆண்டுகள் ஆகும்..

உங்களுடைய உரிமம், ஒரு வர்த்தக வாகனத்துக்குரியதாக இருந்தால், ஒவ்வொரு 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை அது புதுப்பிக்கப்படவேண்டும்

### ஓட்டுனர் உரிமத்தை புதுப்பித்தல்

உங்கள் வயதினைப் பொறுத்து நீங்கள் உங்கள் ஓட்டுனர் உரிமத்தை புதுப்பிக்க வேண்டும். உங்கள் வயது 30 என்றால் 50 வயது வரையிலான செல்லத்தக்க காலத்துடன் நீங்கள் உரிமம் பெறலாம். உங்கள் வயது 45 - க்கு மேல் என்றால் உங்கள் உரிமத்தின் செல்லத்தக்க காலம் 5 ஆண்டுகள் ஆகும்.

உங்கள் உரிமத்தை இறுதி கெடு தேதி முடிந்து, 30 நாட்களுக்குள் கட்டாயம் புதுப்பிக்கவேண்டும். இந்த 30 நாள் அவகாசத்துக்குப் பிறகு வாகனத்தை ஓட்டுவது சட்டப்படி குற்றமாகும்.

### தேவைகள்

- படிவ எண்.9-ல் காணப்படும் விண்ணப்பம்
- வயது மற்றும் குடியிருப்பு ஆதாரத்திற்கான சான்றிதழ்
- தேவைப்படும் இடங்களில் மருத்துவ சான்றிதழ்
- உங்களுடைய தற்போதைய ஓட்டுனர் உரிமம்
- உங்கள் பாஸ்போர்ட் அளவு புகைப்படத்தின் 3 படிகள்

### உரிமம் தொலைந்துவிட்டால்

உரிமத்தை தொலைத்துவிட்டால், அது குறித்து உடனடியாக புகார் செய்யவேண்டும். ஒரு டூப்ளிகேட் சான்றிதழ் வாங்குவதற்கு கீழ்கண்ட வழிமுறைகளைப் பின்பற்றவேண்டும்:

- உரிமத்தை தொலைத்தது தொடர்பான அனைத்து தகவல்கள் மற்றும் விபரங்கள் அடங்கிய எழுத்துபூர்வமான புகாரை காவல் நிலையத்தில் அளிக்கவேண்டும்.
- வர்த்தக உரிமமாக இருந்தால், போக்குவரத்து காவல் துறையினரிடமிருந்து சலான் க்ளியரன்ஸ் அறிக்கையை பெறவேண்டும்.
- படிவம் - 6 - ஐ பூர்த்தி செய்யவேண்டும் (உரிமம் தொலைந்தது அல்லது அழிந்தது தொடர்பான தகவல் அளித்தல் மற்றும் டூப்ளிகேட் சான்றிதழ் கோரும் விண்ணப்பம்.)
- தொலைந்து போன உரிமத்தின் நகல்
- வயது மற்றும் குடியிருப்புக்கான ஆதாரச் சான்றிதழ்.
- உரிய கட்டணம்.

உங்களுடைய சொந்த நலனுக்காக, உரிமத்தின் நகலை எப்போதும் வைத்திருக்கவும் அல்லது உங்களுக்கு உரிமம் வழங்கிய அமைப்பு, உரிம எண், நாள் ஆகியவை குறித்த விவரங்களை குறித்து வைத்திருக்கவேண்டும்.

## » மோட்டார் வாகனப் பதிவு

### பதிவு எண்கள்

ஒரு வாகனத்தை பதிவு செய்து, பதிவு எண்ணைப் பெறாமல் அதனை ஓட்டக்கூடாது.



பதிவுக் குறியீடு, போக்குவரத்து அமைப்பால் ஒதுக்கீடு செய்யப்படும் எண் ஆகியவை:

- மோட்டார் வாகனத்தின் முன்பக்கம் மற்றும் பின்பக்கத்தில, பரிந்துரைக்கப்பட்ட அளவில், குறிப்பிட்ட
- தூரத்திலிருந்து தெளிவாக தெரியுமாறு காட்சிக்கு வைக்கப்படவேண்டும்.

எண் - ஐ ஃபேன்ஸியான முறையில் குறிப்பிடுவது சட்டவிரோதமாகும். தண்டனைக்குரியதாகும்.

எண்ணுக்காக ‘விண்ணப்பிக்கப்பட்டுள்ளது’ என்று தெரிவித்துள்ள வாகனத்தை ஓட்டுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

பதிவு எண் பிளேட்டில், எண்கள் மற்றும் எழுத்துகளின் அளவுகள் மற்றும் நிற அமைப்புகள் ஆகியவை சட்டப்படியான வழிமுறைகள் படியே இருக்கவேண்டும்.

உரிய அமைப்புகளால், உங்கள் மீது குற்ற நடவடிக்கை எடுக்கப்படாமல் இருப்பதற்கு நீங்கள் இந்த வழிகாட்டுதல்களை தவறாமல் பின்பற்றவேண்டியது அவசியமாகும்.

## மாசுக் கட்டுப்பாடு சான்றிதழ்

உங்கள் வாகனமானது, கட்டாயம் ஒரு செல்லத்தக்க மாசுக் கட்டுப்பாடு சான்றிதழைப் பெற்றிருக்கவேண்டும்.இந்த நடைமுறைகள் மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடும். இந்த புதுப்பித்தலானது 3 மாத காலத்திலிருந்து 6 மாத காலம் வரை வேறுபடும்




எனவே ஒரு மாநிலத்தின் விதிமுறைகள் மற்றும் ஒழுங்குமுறைகளை குறித்து அறிந்துகொண்டு அதைப் பின்பற்றவேண்டியது அவசியமானதாகும்.

## வாகனத் தகுதி சான்றிதழ்

ஒரு பாதுகாப்பான மற்றும் நன்கு பராமரிக்கப்படும் வாகனம் மட்டுமே சாலைகளில் செல்ல அனுமதிக்கப்படுகிறது. ஒரு வாகனம் வாங்கி பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாகியிருந்தால், அந்த வாகனம் சாலையில் செல்ல தகுதியுடன் உள்ளது என்பதற்கான தகுதி சோதனைக்கு ஆண்டுதோறும் உட்படுத்தப்படவேண்டும். இது பதினைந்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட அனைத்து வாகனங்களுக்கும் சட்டப்படி பொருந்தும்.

## குறிப்பிட்ட காலத்திற்கொரு முறை பரிசோதனை செய்தல் மற்றும் வாகனப் பராமரிப்பு

சாலையில் செல்வதற்கு தகுதியான வாகனங்கள் மட்டுமே, பயணம் செய்வதற்கு அனுமதிக்கப்படும். இதன் பொருள், அனைத்து மெக்கானிகல் மற்றும் எலக்ட்ரிகல் பகுதிகளும் நன்கு பணியாற்றும் நிலையில் இருக்கவேண்டும். மற்றும் நன்கு பராமரிக்கப்பட்ட நிலையில் இருக்கவேண்டும். தான் ஓட்டும் வாகனம், பாதுகாப்பாக ஓட்டும் நிலையில் உள்ளவாறும், நல்ல நிலையில் உள்ளவாறும் பார்த்துக்கொள்வது ஓட்டுனரின் பொறுப்பாகும். எந்த ஒரு சமயத்திலும் பாதுகாப்பாக ஓட்டுவதற்கு ஏற்றவாறு வாகனம் முறையாக பராமரிக்கப்படவேண்டும்

பாதுகாப்பான முறையில் வாகனத்தை ஓட்டுவதற்கு, ஓட்டுவதற்கு முன்பும், குறிப்பிட்ட காலத்திற்கொரு முறையும் பரிசோதனை செய்துகொள்வது கட்டாயமாகும். ஏதேனும் குறைகள் கண்டறியப்பட்டால் அதனை சரிசெய்யாமல் உங்கள் பயணத்தை துவக்காதீர்கள்.

வாகனத்தை ஓட்டிக்கொண்டிருக்கும்போது, இன்ஸ்ட்ருமென்ட் பேனல், கண்ணாடிகள் மற்றும் வாகனத்தின் நிலைமையில் எப்போதும் கவனத்துடன் இருக்கவும். ஏதேனும் எச்சரிக்கை விளக்கு எரிந்தாலோ, பஸ்ஸர்கள் ஒலித்தாலோ, ஏதேனும் வாசனை அடித்தாலோ அல்லது உங்கள் வாகனம் சரியான நிலையில் இல்லை என்பதற்கான அறிகுறிகள் தெரிந்தாலோ அல்லது வரையறுக்கப்பட்ட காரணிகளுக்குள் உங்கள் வாகனம் இயங்காவிட்டாலோ, வாகனத்தை நிறுத்திவிட்டு என்ன பிரச்னை என்று பார்க்கவும்.




பிரச்னை என்ன என்று கண்டறியப்படாவிட்டாலோ அல்லது பிரச்சனையை தீர்க்க முடியாவிட்டாலோ, வாகனம் ஓட்டிச் செல்வதற்கு பாதுகாப்பானதா அல்லது அதனை அருகிலுள்ள பட்டறைக்கு இழுத்துச்செல்லலாமா என்று முடிவுசெய்யவும்.

ஓட்டுவதற்கு முந்தைய பரிசோதனைகள் மற்றும் பெட்ரோல் பாங்கில் குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை பரிசோதனை செய்தல் மற்றும் ரெகுலர் சர்வீஸிங் போன்றவை ஓட்டும்போது பிரச்சனைகள் ஏற்படுவதை குறைப்பதுடன், பராமரிப்புச் செலவையும் குறைக்கிறது.

## வாகனங்களை தவறாகபயன்படுத்துதல்

நீங்கள் வாகனத்தின் உரிமையாளராக இல்லாவிட்டால், வாகனத்தை தவறான முறைகளில் பயன்படுத்தாதீர்கள். உங்களுக்கு அளிக்கப்பட்ட பணிக்காக மட்டுமே பயன்படுத்தவும். ஓட்டுவதற்கு அனுமதி அளிக்கப்பட்ட நபர்களைத் தவிர வேறு யாரும் அதனை ஓட்ட அனுமதிக்காதீர்

ஏதேனும் விபத்து நடந்தால், உடனடியாக வாகன உரிமையாளருக்கு தெரிவிக்கவும்.

## » சுமை மற்றும் பயணிகளேற்றல்

வாகனங்களின் நிலைப்புத்தன்மை, கட்டுப்பாடுகள் மற்றும் இயக்கத்தைப் பாதிக்கும் காரணியாக சுமையேற்றல் மற்றும் பயணிகளேற்றல் இருக்கிறது. ஒவ்வொரு வாகனமும் ஒரு குறிப்பிட்ட சுமைத் திறனை மற்றும் அதிகபட்ச இருக்கைத் திறனையும் கொண்டிருக்கும்.

அதன் கொள்திறனை மீறி சுமை மற்றும் பயணிகளை ஏற்றும்போது, வாகனம் சேதமடையவும் மற்றும் கட்டுப்பாட்டை இழக்கவும் அது வழி வகுக்கும். இது ஆபத்தான சூழலுக்கு இட்டுச்செல்லும் மற்றும் ஓட்டும்போது கட்டுப்பாட்டை இழக்க நேரிடும்.




## சுமையேற்றல் மற்றும் பொருட்களை ஏற்றிச் செல்லல்

- ► வாகனத்தில் ஒருபோதும் அளவுக்கதிகமான சுமை ஏற்றக்கூடாது. குறிப்பிட்ட அளவுகளை மீறவேண்டாம். (கி.மீ./மீட்டர்/அகலம்/உயரம்).
- ► எடுத்துச் செல்லப்படும் ஒவ்வொரு பொருள் அல்லது பேக்கேஜ் அதற்கான பாதுகாப்பான இடத்தில் வைக்கப்படவேண்டும். தேவைப்படின், அதைக் கட்டி உறுதியாக வைத்தல் வேண்டும்.
- ► கருவிகள், லேப்டாப், தண்ணீர் பாட்டில்கள், போன்ற தனிநிலைப்பட்ட பொருட்களை பின்புற இருக்கை மேடையின் மீதோ அல்லது சரியாக பொருத்தப்படாமல் பின்புற இருக்கையின் மீதோ வைக்கக்கூடாது.
- ► திடீரென நீங்கள் பிரேக் போடும்போது, இந்த தனிநிலைப்பட்ட பொருட்கள் சுற்றிலும் பறந்து உங்களுக்கும், பிற பயணிகளுக்கும் காயம் விளைவிக்க ஆபத்தான ஆயுதங்களாக மாறக்கூடும் மற்றும் கட்டுப்பாட்டை இழக்க வழிவகுக்கும்.




- ► கனமான சுமைகள், காரின் டிக்கிக்குள் வைக்கப்படக் கூடாது.
- ► பயணிகளையும் மற்றும் சாமான்களையும் கொண்டுசெல்லும் போது எப்பொழுதும் கவனமாக இருக்கவும்.
- ► மேற்பரப்பு ரேக்கினை பயன்படுத்துகைளில், எடையின் காரணமாக மேற்பரப்பு நசுங்காமல் இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவும். ஒவ்வொரு மேற்பரப்பிற்கும் மற்றும் ரேக்கிற்கும் அதற்கான எடையளவு உள்ளது. எடுத்துச் செல்லப்படும் பொருட்கள் சரியான பாதுகாப்புடன் இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவும். வாகனத்தை ஓட்டும் போதோ அதை சரி செய்து, பிற சாலை பயன்பாட்டாளர்களுக்கு ஆபத்தினை ஏற்படுத்த வேண்டாம்.




### எச்சரிக்கை:

மேற்பரப்பில் அதிக எடையினை ஏற்றுவது காரின் சமநிலையை பாதித்து, கட்டுப்பாட்டு இழப்பு மற்றும் விபத்துகளை ஏற்படுத்தலாம். ஓட்டுமொத்த சொகுசு, பாதுகாப்பு மற்றும் பாதுகாவல் ஆகியவைகள் ஓட்டுனரின் பொறுப்பே ஆகும்.

## பயணிகள் போக்குவரத்து

பயணிகளின் பாதுகாப்பான போக்குவரத்திற்கு ஓட்டுனரே பொறுப்பாகும். உள்ள இருக்கைகளைவிட அதிகமாகவோ அல்லது பயணிகளின் நிர்ணயிக்கப்பட்ட எண்ணிக்கையை

விட அதிகமாகவோ பயணிகளை கொண்டு செல்ல வேண்டாம். வாகனத்தில் அதிகம் பேரை ஏற்றுவது விபத்திற்கு வழி வகுக்கலாம்.



அனைத்து பயணிகளும் தத்தமது இருக்கை பெல்டுகளை ஒழுங்கா அணிந்திருப்பதை உறுதிப்படுத்த வேண்டியது ஓட்டுனரின் பொறுப்பாகும்.



## குழந்தைகள் போக்குவரத்து

குழந்தைகளின் எடை மற்றும் அவர்களது வயதிற்கேற்ப வடிவமைக்கப்பட்ட இருக்கைகளில் குழந்தைகள் அமர வைக்கப்பட வேண்டும். முன்பக்கமோ அல்லது இருக்கை பெல்டுகள் இன்றியோ குழந்தைகளை அமர விட வேண்டாம்.



## » வாகனம் மற்றும் பயணிகளின் பாதுகாப்பு

பயணிகளையும் மற்றும் வாகனத்தை பாதுகாப்பது ஓட்டுனரின் கடமையாகும்.

திருட்டுகள் குறிப்பாக நகரப்பகுதிகளில் அதிகரித்து வருகின்றன. புத்தம் புதிய மற்றும் விலையதிகமான கார்களையே திருடர்கள் குறிவைக்கின்றனர். அவர்களுடைய கூர்நோக்கம் குறைவான பாதுகாப்பு கொண்ட வாகனங்கள் மற்றும் வசதியான பயணிகளே ஆகும். வீடு அல்லது அலுவலகத்தில் வாகனத்தை நிறுத்தும் போதோ அல்லது பயணிகளுடன் அல்லது பயணிகள் இல்லாமல் வாகனம் ஓட்டும் போதோ கவனத்துடன் இருக்கவும்.



## வாகனத்தை ஓட்டும்போதும் மற்றும் நிறுத்தும்போதும் மேற்கொள்ளவேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்

- வாகனத்தை ஓட்டும் போது அனைத்து கதவுகளையும் உட்பக்கமாக தாழிடவும்.
- சாலை சந்திப்புகளில் இருக்கும் உதவிகேட்போர் மற்றும் திருடர்களிடன் எப்பொழுதும் பேசக்கூடாது. ஒருவர் உங்களிடம் பேசி உங்கள் கவனத்தை களைக்கையில் மற்றறொருவர் உங்கள் காரிலுள்ள பொருட்களை திருடலாம்.
- நேர மேலாண்மையின் அடிப்படையில் உங்கள் பயணத்தை திட்டமிட்டுக்கொள்ளவும்
- இரவுகளில் அதிக வெளிச்சம் கொண்ட பழகிய சாலைகளை மட்டுமே தேர்ந்தெடுக்கவும்.
- முன்பின் தெரியாதவர்களுக்கு எப்பொழுதும் லி.ஃப்ட் அளிக்க வேண்டாம்.
- பாதுபகாப்பான மற்றும் அங்கீகரிக்கப்பட்ட இடங்களில் மட்டும் வாகனத்தை நிறுத்தவும்.
- பழக்கமில்லாத பகுதிகளில் சான்றளிக்கப்பட்ட வழிகாட்டியை பயன்படுத்தவும்.
- உள்ளூர் காவல்துறை, ஆம்புலன்ஸ் மற்றும் தீயணைப்பு நிலையங்களின் எண்களை வைத்துக்கொள்ளவும்.

அனைத்து விண்டோக்களையும் மூடி, பாதுகாப்பு லாக்குகளை போட்டுவிட்டு, சாவியுடன் உங்களுடன் வைத்துக்கொள்வதை எப்பொழுதும் மறக்க வேண்டாம்!